தூரல் என்ன, கீழ்நோக்கியிருந்தால் என்ன, மேல் நோக்கினால் வானத்தைச் சுடும். கீழ்நோக்கினால் தரையைச் சுடும், ஆளைச் சுடாமல் எங்காவது ஒரு பக்கம் நோக்கி இருப்பது நல்லதுதான். (சிரிப்பு) இருந்தாலும் மாண்புமிகு உறுப்பின ருடைய அந்த உணர்வை மதித்து அதைத் திருத்தம் செய்யலாமா என்று பரிசீலிக்கிறேன்.

(இ) மதுரையிலுள்ள சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலே இருக்கிற கூட்டுறவு வங்கிகளில் மிக முக்கியமான வங்கியாக கருதப்படுகிற சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியில் அங்கேயிருக்கிற ஊழியர்கள் சம்பள உயர்வு போன்ற சில பிரச்சினைகளை வைத்து அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அதனாலே மதுரை நகரத்தினுடைய நெசவாளர்களிடத்திலேயும் ஏழை, எளியவர் களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணம் போன்ற பல்வேறு உதவிகள்கூட அந்த வங்கியின் மூலம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்தக் கோரிக்கைகள் நீண்டகாலமாக அந்த ஊழியர்களிடத்திலே இருந்து வந்து, பல்வேறு நேரங்களில் அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டும் கூட அந்த நிலை, அவர்களுக்குத் தர வேண்டிய சம்பள உயர்வுப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு தடவை பதில் அளிக்கிற நேரத்தில் நிலவள வங்கிகள் நஷ்டத்தில் நடக்கின்றன, லாபத்தில் நடக்கிற வங்கியாக இருந்தால் அவர்களுக்கு உரிய லாபத்தில் கிடைக்க வேண்டிய அளவிற்கு பங்கை அவர் களுடைய ஊதிய உயர்வுக்கும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் உடனடி யாக அந்த வங்கியினுடைய ஊழியர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அரசு தலையிட்டு ஆவன செய்யவேண்டும். ஆவன செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட வங்கி, அதிலே உள்ள தொழி லாளர்கள் நான்கு கோரிக்கைகளை மையமாக வைத்து திடீ ரென்று 2-5-1990 ஆம் தேதி போராட்டத்திலே ஈடுபட்டார் கள். அவர்கள் எழுப்பிய அந்த நான்கு கோரிக்கைகளில் 2

கோரிக்கைகள் தொழிலாளர் நல அலுவலரிடம் விசாரணையில் உள்ளது. 2 கோரிக்கைகளுக்கு தேவைப்படுகிற விவரங்கள் முழுமையாக இல்லாத காரணத்தால், மேலும் விவரங்கள் வேண்டுமென்று கோரப்பட்டு இருக்கிறது. அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. ஆனாலும் நேற்று தொழிலாளர்களும் நிர்வாகமும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு ஏற்பட்டு, இன்றைக்கு வேலைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 8-5-1990 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 9-5-1990 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும், விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-5-1990 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 12-5-1990 சனிகிழமைக் காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(10-05 மணி)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர் சங்கத்தின் சார்பாக தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை செல்ல அனுமதி பெறுவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர்கள் சங்கத்தினுடைய சார்பில் ஒரு தூதுக்குழு இலங்கை தலைமன்னாருக்குச் செல்லப்போவதாக இன்று செய்தி வந்துள்ளது. அந்த அமைப்பே இந்தச் செய்தியினை பத்திரிக்கையாளரிடம் தெரிவித்திருக்கிறது. அவர்கள்